# சிறுபான்மை மதங்களுக்கு எதிராக பௌத்த அடிப்படைவாதத்துடன் கைகோர்க்கும் பேரினவாதம்

**சிறுபான்மை** இனங்களை ஒடுக்கியதன் மூலம் தனிமைப்பட்டு வரும் பேரினவாதம், பௌத்த அடிப்படைவாதத்துடன் கூட்டுச்சேர்ந்து சிறுபான்மை மதங்களை ஒடுக்கத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் பெரும்பான்மை மதம், இனம் சார்ந்து தன்னை தக்கவைக்க முனைகின்றது. இலங்கை அரசு வேகமாகவே சர்வதேச அளவில் தனிமைப்பட்டு வரும் இன்றைய நிலையில், இதை எதிர்கொள்ள மத இன அடிப்படைவாதத்தை முன்னிறுத்தி சிறுபான்மையினரை மேலும் கூர்மையாக ஒடுக்கத் தொடங்கியுள்ளது. எல்லா மக்கள்விரோத சர்வாதிகார அரசுகள் போல் தான், இன்று மகிந்த குடும்ப சர்வாதிகாரமும் இதைத் தேர்ந்தெடுத்திருக்கின்றது. இனம் சார்ந்த பிளவுகளும் மோதல்களும் நாட்டின் பிரதான முரண்பாடாக இருக்கின்ற நிலையில், மேலதிகமாக மதம் சார்ந்த மோதல்களையும் பிளவுகளையும் திட்டமிட்டு விதைத்து வருகின்றது.

இந்த வகையில் இலங்கை அரச இனரீதியாக மட்டுமல்ல, மதரீதியாகவும் தன்னை குறுக்கிச் செல்லுகின்றது. இந்த வகையில் அண்மையில் பேரினவாத அரசின் ஆதரவுடன் குறிப்பிடத்தக்க இரு சம்பவங்கள் அரங்கேறியது.

1.முனீஸ்வரம் கோயிலில் மிருகபலி சடங்கு நடைபெற்ற நாள், அமைச்சர் ஒருவர் பௌத்தத்தை முன்னிறுத்தியபடி, மற்றயை மதங்களை நிந்தனை செய்தபடி காடைத்தனத்தைப் புரிந்துள்ளார்.

2. அனுராதபுரத்தில் மிகப் பழைமை வாய்ந்த தர்கா ஒன்றை, அரசின் துணையுடன் பௌத்த அடிப்படைவாதிகள் தகர்த்துள்ளனர்.

இவ்விரு சம்பவங்களும் நடைபெற்ற போது, சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிசார் முன்னிலையில் தான் இவை அனைத்தும் அரங்கேறியது.

மக்களை மதத்தின் பெயரில் துண்டாடியதற்காக, மதக் குரோதத்தை தூண்டியதற்காக, சட்டத்தை மீறியதற்காக எவரையும் இந்த அரசு கைது செய்யவில்லை. இதுதான் சட்டத்தின் ஆட்சியாகின்றது. இது இன்று இலங்கை அரசின் பொதுக்கொள்கையாகி விட்டது. இலங்கை அரசு இனவாதத்தை மட்டும் கொண்டு மக்களை ஒடுக்கி ஆளுகின்ற தன் போக்கில், மேலதிகமான பௌத்தமத அடிப்படைவாதத்தையும் இன்று முன்னிறுத்தியிருக்கின்றது. ஆக இனி அரசின் நிழலில் திரியும் இனப் பூதங்கள் போல், மதப் பூதங்கள் மதப் பூசல்களை உருவாக்கும்.

சிங்கள – பௌத்தம் என்ற பெரும்பான்மையை அடிப்படையாகக் கொண்டு, சிறுபான்மை இனங்களையும் மதங்களையும் ஒடுக்குகின்ற போக்கு கூர்மையாகி வருகின்றது. இதை கொண்டு தான் இலங்கை அரசு உலகளாவிய பொது நெருக்கடிகளை எதிர்கொள்ள முனைகின்றது. உள்நாட்டில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் குறுகிய இன மத உணர்வை மேலும் தூண்டுவதன் மூலம, அதற்குள் மக்களை சிறைவைப்பதன் மூலம், தன் மீதான சர்வதேச நெருக்கடிகளில் இருந்து தன்னை விடுவிக்க முடியும் என்று கருதுகின்றது.

இனவழிப்பு முதல் சிறுபான்மை மதங்களை இழிவுபடுத்தி தூண்டும் குறுகிய உணர்வுகளைக் கொண்டு, பெரும்பான்மையினரின் ஆதரவுடன் மகிந்த குடும்ப சர்வாதிகாரத்தை தக்கவைக்க முனைகின்றது. இதுதான் இலங்கை அரசின் கொள்கையாக உள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் இன மற்றும் மதம் சார்ந்த குறுகிய உணர்வுகளை விதைக்கின்ற அரசுக்கு எதிராக, சிறுபான்மை மக்கள் தங்களுக்கு எதிரான இந்த அரசின் ஒடுக்குமுறைகளை அந்த மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதன் மூலம் பெரும்பான்மை மக்களை அரசிடம் இருந்து தனிமைப்படுத்த வேண்டும். இதற்காக சிறுபான்மை மக்கள் தங்கள் குறுகிய உணர்வுகளில் இருந்து விடுபட வேண்டும். அரசை தனிமைப்படுத்துகின்ற அரசியல் வழிமுறை மூலம் தான், இந்த ஒடுக்குமுறையை நாம் எதிர்கொள்ள முடியும்;. எம்மை நாம் தனிமைப்படுத்திக் கொண்டு இதை வெல்ல முடியாது.

பெரும்பான்மை மத்தியில் இன மத குறுகிய உணர்வை விதைக்கின்ற அரசுக்கு எதிராக நாம் போராடுவது என்பது, இன மத குறுகிய உணர்வுகளுக்கு அவர்கள் பலியாவதை தடுக்க போராடுவதுதான். இதை நாம் எம் குறுகிய உணர்வுடன் ஒருநாளும் செய்ய முடியாது. இதை பயன்படுத்தித் தான் சிறுபான்மை இன மற்றும் மதங்களை அரசு மிக இலகுவாக ஒடுக்கி வருகின்றது. எம்மை நாம் குறுகிய உணர்வில் இருந்து விடுவிக்காத வரை, பெரும்பான்மை சார்ந்த ஒடுக்குமுறைக்கு நாம் பலியாவது தொடரும்.

பி.இரயாகரன்

21.09.2011

# சிறுபான்மை மதங்களுக்கு எதிராக பௌத்த அடிப்படைவாதத்துடன் கைகோர்க்கும் பேரினவாதம்

## සුළු ජාතීන්ගේ ආගම්වලට එරෙහිව බෞද්ධ මූලධර්මවාදය හා එක්ව පෙළ ගැසෙන සිංහළ ජාතිවාදය

සුළු ජාතීන් මර්ධනය කිරීමෙන් පසුව දැන් රජය බෞද්ධ මූලධර්මවාදය සමග එක්ව එම සුළු ජාතීන්ගේ ආගම් මර්ධනය කිරීමටත් ක්‍රියා කරමින් සිටියි. තමාගේ ස්ථිර බව තහවුරු කරන්නට රජය මාන බලන්නේ මෙලෙසිනි.

එසේ වුවද, මෙම ක්‍රියා පිළිවෙල නිසා රජය ජාත්‍යන්තර මට්ටමෙන් හුදෙකලා කරනු ලබමින් සිටියි. නමුත් එයින් පසුබට නොවී සුළු ජාතීන් කොන් කිරීමේ සිය ක්‍රියාවලිය රජය තවතවත් වේගවත් කරමින් සිටියි.

ඒදා සිට අද වන තෙක් මෙහි ආණ්ඩු කළ සියලුම රජයන් සේම මහින්ද පවුලද සිය අධිරාජ්‍යවාදී මර්ධන ක්‍රියාකාරකම් මුදා හරිමින් සිටියි. ජාති වශයෙන් ජනයා වෙන් වී සිටින මෙවන් දුර්භික්ෂ අවදියක මහින්ද රජය හිතා මතා ආගම් බේදයක්ද කුමන්ත්‍රණශීලීව වපුරමින් සිටියි. මෙම කුමන්ත්‍රණයට අදාලව මෑතක සිදු වූ සිද්ධි දෙකක් පහත දක්වමි:

**1.** මුන්නේශ්වරම් කෝවිලෙහි සිවුපාවුන් බිලි දීමේ උත්සව දිනයෙහි එහි කඩා වැටුනු මහින්දගේ ඇමතිවරයෙක් බුද්ධාගමේ නිර්දේශ හුවා දක්වමින් හින්දු ආගමට නිගා ගෙන දෙන ආකාරයෙන් දඩබ්බර අන්දමින් ආන්දෝලනාත්මකව ක්‍රියා කර එම ආගමික වතාවතට බාධා ඇති කළේය

**2.** අනුරාධපුරයෙහි පිහිටි මුස්ලිම් ශාන්තුවරයෙකුගේ ඉපැරණි සොහොනක් රජයේ අනුදැනුම පිට බෞද්ධ අන්තවාදීන් පිරිසක් පොළොවට සමතලා කර දැමූහ.

ඉහත සිද්ධීන් දෙකම සිදු වූයේ නීතිය හා සාමය ආරක්ෂා කළ යුතු පොලිස් නිලධාරීන් බලා සිටි විටමය. ආගමික බේදයක් ජනයා අතර උසි ගැන්වීමට ක්‍රියා කළ වරදට එම සිද්ධීන්වලට අදාල දාමරිකයන් කිසිවෙකුව රජය අත් අඩංගුවට නොගත්තේය. නීතියේ පාලනය ලංකාවේ තිබෙන්නේ මේ ආකාරයෙනි. මෙය ලංකා රජයේ ප්‍රතිපත්තියක් ලෙසින්ම දැන් පත්ව ඇත.

ජාතිවාදය සමගම ආගම්වාදයක්ද රජය මුදා හැර තිබෙන හෙයින් මින් මතු ජාතවාදී රකුසන් පමණක් නොව ආගම්වාදී රකුසන්ද රටේ කලබල ඇති කරනු ඇති. ලේ වගුරවන්නට ජනයා උසි ගන්වනු ඇත.

රටේ මහජාතිය බෞද්ධයන් හෙයින් බෞද්ධාගම අවියක් කර ගනිමින් සුළු ජාතීන් හා සුළු ජාතීන්ගේ ආගම් කොන් කිරීම හා මර්ධනය කිරීම දියුණු තියුණු වෙමින් පවතී. රජයට ලොව පුරා විවිධ බාධක පැනවෙන්නේ රජයේ මෙම දුෂ්ට ආකල්පය නිසාය. නමුත් රටේ බහුතරය ජාතිවාදී රාමුවක් තුල සිර කර තැබීමෙන් මෙම ජගත් අභියෝග පරාජය කිරීමට තමාට හැකි වනු ඇත යැයි රජය සිහින දකිමින් සිටියි.

මහින්ද පවුල සදාකාලිකව රට තම ග්‍රහණයේ තබා ගන්නට තෝරා තිබුනු අවිය ජාතිවාදය වූ අතර එම අවියට දැන් ආගම් වාදයත් මුවහත් කර එකතු කර තිබේ.

සිංහළ ජනයා අතර ජාති හා ආගම්වාදයට අදාල පටු මත රෝපණය කරන රජයට එරෙහිව මෙම දුෂ්ට රජයේ අයුක්තිසහගත මර්ධන ක්‍රියාකාරකම් ගැන මහජනයාට සුළු ජාතීන් පැහැදිලි කළ යුතුය. මේ අනුව මෙම දුෂ්ට රජය හුදෙකලා කළ හැකිය. මෙය සඳහා පළමුවෙන් සුළු ජාතීන් තමන්ගේ පටු මතවාදයන් අත් හල යුතුය. ඒවායින් නිදහස් විය යුතුය. අපට රජය පරාජය කළ හැක්කේ මෙසේ එය හුදෙකලා කිරීමෙන් පමණි. එය වෙනුවට මහ ජාතියෙන් අපවම හුදෙකලා කර ගැනීමෙන් අපට මෙම ව්‍යසනයෙන් ගැලවිය නොහැක.

රජයට එරෙහිව සටන් කිරීම යනු මහජනයා ජාති හා ආගම්වාදවලට ගොදුරු වීම වැළැක්වීම සඳහා සටන් කිරීමයි. අප හිස මතම පටු අදහස් තබා ගෙන මෙය කිසි විටෙක අපට කළ නොහැක. රජය සිය දුෂ්ට අරමුණෙහි ජය අත් කරමින් සිටින්නේ අපගේ මෙම වැරදි ක්‍රමෝපායේ පිහිටෙනි. එහෙයින් අපව මෙම පටු ආකල්පවලින් අප නිදහස්

කරගන්නා තෙක් අපට කිසිදු විමුක්තියක් නොමැත. තවද එසේ අප නොකඩවා අපගේ පටු මතවල පිහිටා සිටිමු නම් රජයේ මර්ධනයට අප ගොදුරු වී අවසානයෙහි සම්පූර්ණයෙන්ම විනාශ වී යනු නිසැකය.

පී. ඉරයාභරන්

21.09.2011